வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 12.09.2024 வியாழக்கிழமை இதழ் : 255 பக்கங்கள் : 12

# யாழில் கூறும் விடயங்களை கேட்டு அழிவை நோக்கிச் செல்லமுடியாது!

## பிள்ளையான் சொல்கிறார்

### வடக்கு, கிழக்கில் உள்ளக பிரச்னைகள்தானாம்!

திருக்கோவில், செப்ரெம்பர் 12

**யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்லமுடியாது. அவர்களின் பிரிவினைவாத கருத்துகளை பின்பற்றினால் பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியாது. வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள உள்ளக பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

நேற்று அம்பாறை - திருக்கோவிலில் நடந்த பிரசார கூட்டத்திலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் என்பது மக்களின் ஆணை ஊடாக ஆணையைப் பிடிப்பதாகும். நாட்டில் நிறைவேற்றுத்துறையின் அதிகாரம் என்பது சிறுபான்மை மக்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். அந்த வகையில் கிழக்கு

11

## மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை சமர்ப்பியுங்கள்!

### நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவு

தென்மராட்சி, செப். 12

மருத்துவர் அர்ச்சுனாவின் ஆதாரமற்ற அவதூறுகளை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த சாவகச்சேரி நீதிவான், அர்ச்சுனாவுக்கு எதிராக 14 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேநேரம், அவருக்கு பிணை ஒப்பமிட்டவர்களும் விலகியுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகராக செயல்பட்ட சமயத்தில், அர்ச்சுனா ஏற்படுத்திய குழப்பங்கள், பேஸ்புக் நேரலையில் பரப்பிய அவதூறுகள் தொடர்பான வழக்குகள் சாவகச் சேரி நீதிவான் நீதிமன்றில்

11

## சஜித்துக்கு ஆதரவளிக்குமாறு சில தூதரகங்கள் வற்புறுத்தல்!

### ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 12

"சஜித் பிரமதாஸவுக்கு ஆதரவு அளிக்குமாறு சில வெளிநாட்டுத் தூதரகங்கள் மறைமுகமாக வற்புறுத்துகின்றன", என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் பணிமனையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தமிழ் அரசுக் கட்சியின் குறிப்பிட்ட சில தலைவர்களை மாத்திரம் சொல்லிவிடமுடியாது. எதிர்க்கட்சி தலைவர் சஜித்

11

## கெஹலிய உட்பட மூவருக்கு பிணை

கொழும்பு, செப். 12

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட மூவரை நேற்று புதன்கிழமை பிணையில் விடுவித்தது கொழும்பு - மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் 11 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நீதிமன்றுக்கு விடுத்த பிணை கோரிக்கை கடந்த

11

## 3 பிரதான வேட்பாளர்களும் அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தவில்லை!

### தமிழ்ப் பொது வேட்பாளர் சாடல்

மட்டக்களப்பு, செப். 12

அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தாத வேட்பாளர்களாகவே தென்னிலங்கை வேட்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பெரிய போரதீவில் நேற்று நடத்திய மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இந்த நாட்டிலே நடந்த நீண்ட கால இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது சுட்டிக்காட்டப்படவில்லை. இந்தப் பிரச்னைக்கான

11

## சகல மலையக, முஸ்லிம் மக்களும் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்குக

### விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 12

மலையக, முஸ்லிம் மக்கள் விருப்பு வாக்குகளில் ஒன்றை தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் சின்னமான சங்கு சின்னத்துக்கு அளிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாதம் ஒரு கேள்விக்கு பதில் என்று அவர் அனுப்பிவைத்த குறிப்பிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரியநேத்திரன் பாராளுமன்றத்தில் மலையக மக்களுக்காக முன்னர் குரல் கொடுத்தவர். அவர் மலையக

11

## தபால் மூல வாக்களிப்பு; இன்றே இறுதி சந்தர்ப்பம்!

கொழும்பு, செப். 12

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று வியாழக்கிழமையுடன் நிறைவடைகிறது. எனவே, தகுதி பெற்றவர்கள் வாக்களிக்க இன்றே கடைசி சந்தர்ப்பம் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கடந்த 4, 5, 6ஆம் திகதிகளில் நடைபெற்றது. அன்றைய தினங்களில் வாக்களிக்கத் தவறியவர்களுக்கு நேற்றும் இன்றும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இன்றைய

11

## 1 கோடி வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டன!

கொழும்பு, செப். 12

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில், 10 மில்லியனுக்கும் அதிகமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எஞ்சியிருக்கும் வாக்காளர் அட்டைகள் வரும் நாட்களில் வாக்காளர்களுக்கு விநியோக்கிக்கப்படும். நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு

11

## மக்களிடையே ரணிலுக்கு ஆதரவு அதிகரிக்கின்றது!

### ராஜித சேனாரட்ன எம். பி.

கொழும்பு, செப். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான மக்கள் ஆதரவு அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. வீடுவீடாக சென்று மக்களை தெளிவுபடுத்த ஆரம்பித்ததன் மூலம் இந்த மாற்றத்தை அறிந்துகொள்ள முடிகிறது. நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம்

11

## தேர்தல் பரப்புரைகளில் சிறார் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, செப். 12

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பான காணொலிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் நிலையில் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய வேலைத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் பிரியந்த ஹேரத்தால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

11

## 'சங்கு' சின்னத்துக்கு வாக்களிக்களியுங்கள்!

### நாடுகடந்த தமிழீழ அரசு கோரிக்கை

ஒன்ராறியோ, செப். 12

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தேசத்தால் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலை அரசியலின் முனைப்பாக தேசமாக, தேசிய இனத்தின் திரட்சியாக, சங்கு

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காதேவி ஆலய மகா யாகம் இன்று!

தென்மராட்சி, செப். 12

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தான மகா யாகம் இன்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் நேற்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகியிருந்தன.

தென்மராட்சி இந்து அந்தண குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் விசேட குருமார்கள் இன்றைய மகா யாகத்தில் பங்கேற்கவுள்ளனர். இந்த மகா யாகத்தில் விசேட 108 திரவிய ஹோமமும் விசேட 108 திரவிய அபிஷேகமும் நடைபெறவுள்ளன. (ஐ)

## பஸ்ஸில் கசிப்பை கடத்த முற்பட்டவர் சிக்கினார்!

கிளிநொச்சி, செப். 12

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் இருந்து பஸ் ஒன்றில் கசிப்பைக் கடத்த முற்பட்ட சந்தேக நபர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடதாசிப் பெட்டியில் பொதி செய்யப்பட்டு தருமபுரம் பஸ் தரிப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்த கசிப்பை பஸ்ஸில் ஏற்ற முற்பட்ட வேளையே குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கசிப்பை தருமபுரம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு செல்ல முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடமிருந்து 28 லீற்றர் கசிப்பும், கசிப்பு கொண்டு செல்வதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (அ)

## 274 பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி வழங்கல்!

யாழ்ப்பாணம், செப். 12


சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளை சேர்ந்த பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்ட 274 மாணவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று புதன்கிழமை சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் நடைபெற்றது.

34 பாடசாலைகளை சேர்ந்த 7 ஆயிரத்து 500 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களில் பார்வைக் குறைபாடுடைய 274 மாணவர்களுக்கே இந்த கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், 14 வரையான பிள்ளைகள் மேலதிக கண்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

மலேசியாவை சேர்ந்த 'அழகா' (Alaka) பௌண்டேசன் நிறுவுநர்களான பிரமால் தம்பதியர் இந்தக் கண்ணாடிகளுக்கான நிதியுதவியை வழங்கியிருந்தனர். யாழ். போதனா மருத்துவமனையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் எம். மலரவனின் முயற்சியால் இந்த இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் "அழகா" பௌண்டேசன் நிறுவுநர்கள், கண் சத்திரசிகிச்சை நிபுணர் எம். மலரவன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரண, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மருத்துவர் யோ. யதுனந்தனன், சங்கானை கல்வி கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.





## இராஜாங்க அமைச்சரின் செயலருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 12

மணல் அகழ்வு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்க 15 இலட்சம் ரூபா கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் ஒருவரின் பிரத்தியேக செயலாளர் உள்ளிட்ட இருவர் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சுமார் ஒன்றரை மாதங்களாக விளக்க மறியலில் உள்ளதால் அவர்களை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்குமாறு அவர்களது சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

எவ்வாறாயினும், இந்த கோரிக்கையை நீதவான் நிராகரித்து, சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## 436,000 சுவரொட்டிகள் அழிப்பு

கொழும்பு, செப். 12

இதுவரையான காலப்பகுதியில் 436,000 சட்டவிரோத தேர்தல் சுவரொட்டிகளை அழித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், 2,400 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத பதாகைகள் மற்றும் கட் அவுட்கள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ கூறினார்.

அத்துடன், தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 65 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)




## நண்பர்களின் போர் ரி-20; மகாஜன கல்லூரி வெற்றி!




யாழ்ப்பாணம், செப். 12

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர் அணியை 130 ஓட்டங்களால் வெற்றி கொண்டது தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பழைய மாணவர் அணி.

நண்பர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி - சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர்கள் இடையேயான இருபது - 20 போட்டி அண்மையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜன கல்லூரி 20 ஓவர்களில் 269 ஓட்டங்களை குவித்தது. இதில், தயுஸ்ரன் அபாரமாக துடுப்பெடுத்தாடி 16 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன 149 ஓட்டங்களை குவித்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர் அணி 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால், 130 ஓட்டங்களால் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி வெற்றி பெற்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.09.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் கவனத்துக்கு...!

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரான பொ. ஐங்கர நேசன், "சஜித் பிரேமதாஸவை ஆதரிக்குமாறு சில வெளிநாட்டு தூதரகங்களும் மறைமுகமாக வற்புறுத்துகின்றன", என்று குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் தேர்தல் பணிமனையில் வைத்தே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு என்ன ஆதாரம் உண்டு? இராஜதந்திர சமூகத்தோடு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டும் தொடர்பில் இல்லை - மாறாக, புத்திஜீவிகள், சிவில் சமூக பிரதிநிதிகளும் தொடர்பில் இருக்கின்றனர்.

அவர்களின் கருத்துப்படி இதுவரையில் வெளிநாட்டு தூதரகங்கள் அவ்வாறு குறிப்பிட்டதற்கு சான்றில்லை. இது தொடர்பில் 'ஈழநாடு' பல தகவல்களை அறிந்திருக்கின்றது. குறிப்பாக, மேற்குலக தூதரகங்களைப் பொறுத்தவரையில் அனைத்தையும் ஜனநாயகக் கண்கொண்டே அவர்கள் நோக்குவதுண்டு. அவர்களைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கவும் இல்லை - எதிர்க்கவும் இல்லை. இது உங்களின் வியாபாரம். அதனை எவ்வாறு செய்வது - எவ்வாறு இலாபத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று சிந்திப்பது - அதற்காக செயல்படுவது என்பதெல்லாம் உங்களின் பிரச்னை. இதனால் ஏற்படும் நன்மையும் தீமையும் உங்களுக்குத்தான் - என்பதே அவர்களின் நிலைப்பாடு. இதேபோன்றுதான் இந்திய இராஜதந்திரிகளும் கருத்துரைக்கின்றனர் என்று தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் ஈழநாட்டிடம் கூறுகின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது முற்றிலும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக ஒன்றுபட்டிருப்பவர்களின் நிலைப்பாடு. எதிர்பார்க்கப்படும் வாக்குகள் கிடைத்தால் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை ஓர் ஒன்றுபட்ட புதிய அணியாக பலப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். ஒருவேளை எதிர்பார்த்த வாக்குகள் கிடைக்காது போனால் பொதுக் கட்டமைப்பின் கீழ் அரசியலை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்கொள்ளலாம்.

ஒற்றுமையை பலப்படுத்துவது என்பது வெறுமனே பொது வேட்பாளருக்காக பணியாற்றுவதுடன் முடிந்துவிடாது. மாறாக, அந்த ஒற்றுமையை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறு பேணிக் கொள்ளலாம் என்னும் சிந்தனையுடன் ஒவ்வொரு விடயத்தையும் முன்னெடுக்க வேண்டும். பொதுக் கட்டமைப்பின் சார்பில் நடத்தப்படும் கூட்டங்கள், ஒரு கட்சியின் கூட்டமாக இருக்கக்கூடாது. அனைத்தும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் பணிமனையில் இருந்து வெளிநாட்டு தூதரகங்கள் தொடர்பில் இவ்வாறான கருத்துகள் வெளிவருகின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் எத்தனை வாக்குகளையும் பெறலாம். ஒருவேளை, பத்து இலட்சம் வாக்குகளை பெற்றாலும் சர்வதேச இராஜதந்திர சமூகத்தின் கடைக்கண் பார்வையின்றி எதுவும் அசையாது. எனவே, புளகாங்கித மனோநிலையில் கருத்துகளை கூறாமல் இராஜதந்திர சமூகம் தொடர்பில் மிகவும் அவதானமாகக் கருத்துகளை முன்வைக்க வேண்டும். இந்த மாதம் 21ஆம் திகதியுடன் அனைத்தும் முடிந்துவிடப் போவதில்லை. மீண்டும் அவர்களுடன்தான் பேச வேண்டிவரும் - அவர்களைப் புறம்தள்ளி தமிழர்களால் எதனையும் செய்துவிட முடியாது. இதனை உணர்ந்துதான் கருத்துகளை முன்வைக்க வேண்டும். இது தொடர்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக ஒன்றுபட்டிருக்கும் கட்சிகளும் சிவில் சமூக பிரதிநிதிகளும் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், தமிழர் அரசியல் அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாகிவிடக்கூடாது.

# யாழ்ப்பாணத்தில் ஓட்டோவில் இளைஞனை கடத்தி கொள்ளை

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணத்தில் முச்சக்கரவண்டி ஒன்றில் இளைஞனை கடத்தி சென்று, தாக்கி இளைஞனிடம் இருந்து 10ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைதான இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பகுதியை சேர்ந்த இளைஞனை முச்சக்கர வண்டி ஒன்றில் மூவர் கடத்திச் சென்று தாக்குதல் நடத்தி பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளையடித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வரை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை தலைமறைவாகியுள்ள ஏனைய இரு வரையும் கைது செய்வதற்கு கோப்பாய் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (அ)

# பொலிஸ் அத்தியட்சகர் பிம்ஷானியின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன

## பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 12

சமூகப் பொலிஸ் பிரிவிற்கு பொறுப்பான பதில் பிரதி பொலிஸ் மா அதிபராக பெண் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிம்ஷானி ஜசிங்கராச்சியை நியமிப்பது தொடர்பில் பரிசீலிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சமூக பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பதில் பிரதி பொலிஸ் மா அதிபராக தன்னை மீண்டும் நியமிக்க உத்தரவிடுமாறு கோரி பிம்ஷானி ஜசிங்கஆராச்சி தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஜசிங்கஆராச்சி தனது மனுவில், ஐக்கிய நாடுகளின் கடமைகளுக்காக நாட்டை விட்டுச் செல்வதற்கு முன்னர், அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பதில் பிரதி பொலிஸ் மா அதிபராக தனது கடமைகளை நிறைவேற்றுவதாகக் குறிப்பிட்டுள்ளார். நாடு திரும்பியதும் அந்த பிரிவின் தற்காலிக பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

அவரை பதவியில் இருந்து நீக்கியதன் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.

எஸ். துரைராஜா, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் மற்றும் பிரதிவாதிகளின் சமர்ப்பிப்புகளை பரிசீலித்த உயர்நீதிமன்றம், அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகத் தெரிகிறது என்று உறுதி செய்தது. (அ)

### பஸ்-லொறி மோதி 21 பேர் படுகாயம்

கொழும்பு, செப். 12

கொழும்பு - கண்டி வீதியின் வரகாபொல, தும்மல தெனிய பிரதேசத்தில் பேருந்தும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் லொறியின் சாரதியும் அடங்குவதாகவும் அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் வரக்காபொல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தாண்டிக்குளத்தில் மோட்டர் குண்டு மீட்பு


வவுனியா, செப். 12

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வெற்று காணி ஒன்றிலிருந்து மோட்டர் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றினை அதன் உரிமையாளர் துப்பரவு செய்தபோது குறித்த காணியில் சந்தேகத்திற்கிடமான வெடி பொருள் இருப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, வவுனியா பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டதுடன், அது மோட்டர் குண்டு என உறுதிப்படுத்தினர். விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கையை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லை என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். மறதியால் பிரச்சனை வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உங்களின் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடியான மாற்றம் உண்டாகும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றி பயம் வந்துநீங்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் கடமை உணர்வுடன் செயல்பட தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். இனிமையான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில்புதுவாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
புதிய பாதையில் பயணிக்க தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதை கூடும். மனசாட்சிபடி செயல்பட வேண்டிய நாள்.

தமிழ்நாடு அரசியலில் பரபரப்பு:

# தி. மு. க. கூட்டணியில் இருந்தவாறே அ. தி. மு. கவுக்கு வி.சி.க. அழைப்பு!

சென்னை, செப். 12

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி மது ஒழிப்பு மாநாட்டுக்கு அ. தி. மு. க., தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்.

"மது - போதைப் பொருட்கள் ஒழிப்பு மாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் "அதிமுக" பங்கேற்கலாம் - என்று திருமாவளவன் விடுத்த அழைப்பில் கூறியிருந்தார்.

இந்நிலையில், அ. தி. மு. கவுக்கு விடுத்த அழைப்பு தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த திருமாவளவன், அ. தி. மு. க. மட்டுமல்ல. மது ஒழிப்பில் உடன்பாடு இருக்கும் எந்த கட்சியாக இருந்தாலும் இந்த போராட்டத்துக்கு வரலாம் என கூறினார். மேலும் மதுவை ஒழிக்க மட்டுமே அறைகூவல் விடுக்கிறேன். இது 2026 பேரவைத் தேர்தலை முன்னிறுத்தி அல்ல - என்றார்.

திருமாவளவனின் இந்த அழைப்பு, தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆளும் தரப்பில் இருந்துகொண்டே தி. மு. கவுக்கு எதிராக மாநாடு நடத்துவதும் அந்த மாநாட்டுக்கு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்திருப்பதுமே தமிழக அரசியலில் இப்போது பேசுபொருள் ஆகியுள்ளது. (ஐ)

# கடற்படையின் படகு மீனவர்களின் படகை மோதியதில் 4 பேர் பாதிப்பு!

நாகபட்டினம், செப். 12

தங்களின் படகை இலங்கை கடற்படையின் படகு மோதி கவிழ்த்தது. இதில், 4 மீனவர்கள் கடலில் விழுந்து காயமடைந்தனர் என்று தமிழ்நாடு மீனவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் தாம் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அவர்கள் கூறினர்.

கடற்படையின் படகு தமது படகை மோதியதில் அதிலிருந்த நான்கு மீனவர்களும் கடலில் விழுந்தனர். அவர்கள் வலைகளில் சிக்கி காயமடைந்தனர். கடலில் விழுந்த தங்களை படகில் ஏற்றிய இலங்கை கடற்படையினர் 6 மணி நேரம் விசாரணை செய்து மிரட்டினர் - முதலுதவி எதுவும் செய்யவில்லை என்றும் மீனவர்கள் கூறினர்.

பின்னர், மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களிடம் ஒப்படைத்து விட்டு கடற்படையினர் திரும்பினர் என்றும் அவர்கள் கூறினர்.

கடற்படை படகு தமது படகை மோதியதில் 6.5 இலட்சம் (இந்திய) ரூபாய் மதிப்பிலான பொருட்கள் கடலில் மூழ்கின என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# புதிய கல்விக் கொள்கையை ஏற்றால் உரிய நிதி தருவோம்!

## மத்திய இணை அமைச்சர் முருகன்



சென்னை, செப். 12

தமிழக அரசு புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், உரிய நிதி வழங்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் எல். முருகன் கூறினார்.

மேலும், நாடு முழுவதும் பாஜக உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த 2ஆம் திகதி பிரதமர் மோடி உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார். உலகிலேயே அதிகமான உறுப்பினர்களை கொண்ட கட்சி பாரதிய ஜனதா கட்சியாகும்.

தமிழகத்தில் ஆன்மிகம் பேசினால், அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்ற நோக்குடன் தி. மு. க. அரசு செயல்படுகிறது. தமிழகம் மிகப் பெரிய ஆன்மிக பூமியாகும். ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆண்ட பூமி. இங்கு போலி திராவிடத்துக்கு இடமில்லை.

பா. ஜ. க. எங்கும் ஹிந்தியை திணிப்பதில்லை. புதிய கல்விக் கொள்கை மூலம், ஆரம்ப கல்வியை தாய் மொழியான தமிழில் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். தற்போதைய காலகட்டத்தில், புதியதொழில்நுட்பத்துக்கு ஏற்ப, மேம்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். தமிழக அரசு புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால், உரிய நிதி வழங்கப்படும் - என்றார். (ஐ)

# திரைப் பிரபலங்களுக்கு விஜய் இரகசியத் தூது!

சென்னை, செப். 12

பா. ஜ. கவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரைப் பிரபலங்கள் பலர் உள்ளனர். இவர்களை தமது கட்சிக்கு அழைக்க நடிகர் விஜய் இரகசிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

தமிழக பாரதிய ஜனதாவில் நடிகை குஷ்பு, ராதிகா, நமீதா, நடிகர்கள் சரத்குமார், ராதாரவி, செந்தில், இசையமைப்பாளர் கங்கை அமரன் எனப் பல திரைப் பிரலபலங்கள் இருக்கிறார்கள்.

இவர்களில் குஷ்பு, தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து விட்டு மாநில அளவில் கட்சி பணியாற்ற வந்துள்ளார்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், அவர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இதேபோல் கடந்த பாராளுமன்ற தேர்தலில் நடிகை ராதிகா விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டார். அவரும் வெற்றி வாய்ப்பை இழந்தார். திரை நட்சத்திரங்களிடையே தங்களுக்கு கட்சியில் உரிய பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்ற ஆதங்கம் இருப்பதாக கூறப்படுகிறது.

இதையறிந்த நடிகர் விஜய் யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சிக்கு அவர்களை இழுக்க முயற்சிகள் நடப்பதாக கூறப்படுகிறது. இதற்காக இரகசிய தூதும் விட்டு வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், இதற்கு இன்னும் சாதகமான பதில்கள் கிடைக்காததால் தொடர்ந்து பேசி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 நாடுகளுக்கு சலுகை; எங்களுக்கு இல்லையா?

## இலங்கையுடன் பாகிஸ்தான் போர்க்கொடி

கொழும்பு, செப். 12

**இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் தனது பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து பாகிஸ்தான் சீற்றமடைந்துள்ளது.**

இலங்கை அரசாங்கம் 38 நாடுகளின் பிரஜைகள் விசா இல்லாமல் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

எனினும் இந்த பட்டியலில் தனது நாடு இடம்பெறாதமை குறித்து பாகிஸ்தான் சீற்றமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் ரவீந்திர விஜயகுணவர்த்தன, இதனை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார் எனவும் பாகிஸ்தானையும் இந்த பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் பிரஜைகளுக்கான விசா வழங்கும் நடைமுறை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள இலங்கைக்கான பாக்கிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் உல் அஜீஸ், இந்தியா உட்பட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இதனை மாற்றாந்தாய் மனப்பான்மை என வர்ணித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரஜைகள் இலங்கைக்கு சுமுகமான விதத்தில் பயணம் செய்வதை உறுதி செய்வதற்காக தற்போதைய நடைமுறையை உடனடியாக மாற்றவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# மதுஷான் சந்திரஜித் கைது!

கொழும்பு, செப். 12

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பேரணியில் ஈடுபட்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டார்.

தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தது.

# சீதாகுமாரி அறம்பேபொலவுக்கு மேலுமோர் இராஜாங்க அமைச்சு

கொழும்பு, செப். 12

சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா குமாரி அறம்பேபொல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சீதா குமாரி அறம்பேபொல, சுகாதார இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்து வரும் நிலையில், அவர் சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 12

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 22 இந்திய மீனவர்களில் 10 பேரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு படகுகளில் தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த 22 மீனவர்களில் 10 மீனவர்களுக்கே இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்தமை தொடர்பில் இந்த 22 இந்திய மீனவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்களான இந்திய மீனவர்கள் 22 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் 22 பேரும் கடந்த 3 ஆம் திகதி புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர்களான 22 இந்திய மீனவர்களில் 12 பேர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக, குறித்த 12 மீனவர்களுக்கும் தலா ஒன்றரை கோடி ரூபா வீதம் அபராத தொகையை செலுத்துமாறும், அபராத தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், ஏனைய 10 பேரையும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், குறித்த 10 இந்திய மீனவர்களும் நேற்று முன்தினம் ண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# கருத்தரங்குக்கு சமுகமளிக்காத மாணவர்களை தாக்கிய அதிபர்!

## எழுவர் வைத்தியசாலையில்

கொழும்பு, செப். 12

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கந்தபளை பகுதியில் உள்ள தமிழ் பாடசாலையொன்றில் இருந்து இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள ஏழு மாணவர்கள், அதிபரின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரால் ராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா வலய கல்வி காரியாலயத்திற்கு சென்று பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்யுமாறும், அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பெற்றோர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

எனினும், இச்சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கூறுகையில்-

கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வி கருத்தரங்குக்கு செல்லாத ஏழு மாணவர்களை பிரம்பால் தாக்கியுள்ளார். இதனால் பிள்ளைகளுக்கு நடக்க கூட முடியாதுள்ளது." - என்று குறிப்பிட்டனர்.

அதேவேளை, போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த நுவரெலியா வலயக்கல்வி பணிமனை அதிகாரிகளும், ராகலை பொலிஸ் நிலைய அதிகாரிகளும் உடனடியாக இந்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்து பாடசாலையில் இருந்து குறித்த அதிபரை வெளியேற்றி நுவரெலியா வலயக்கல்வி பணிமனை அழைத்துச் சென்றதன் பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது. (அ)

# கொலம்பியாவிலிருந்து வந்த பொதியில் 2 கிலோகிராம் போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, செப். 12

கொலம்பியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட பொதி ஒன்றிலிருந்து 2.14 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

75 மில்லியன் ரூபாய் பெறுமதியான இப்போதைப்பொருள், கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சிய முனையத்தில் வைத்து மீட்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொலம்பியாவின் பொகோடாவிலிருந்து கனேமுல்ல பகுதியிலுள்ள முகவரிக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்ட இந்த பொதியிலிருந்த மின் சாதனமொன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இப்போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், சந்தேகத்தின் பேரில் 23 மற்றும் 24 வயதுடைய இருவர் மற்றும் பொதிகள் சேவை முகவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# அறிவிப்பின்றி 5 நாட்களுக்கு மேல் கடமைக்கு வராவிடின் சேவையை விட்டு விலகவேண்டும்!

## அரசாங்க சேவை ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, செப். 12

அரசாங்க அதிகாரிகள் அறிவிப்பின்றி 5 நாட்களுக்கு மேல் கடமைக்கு சமுகமளிக்காவிடின், அடுத்த 5 நாட்களுக்குள் அவர்கள் சேவையை விட்டு வெளியேறுவதற்கான அறிவிப்பை அறிவிக்கவேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கையொன்றினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகள் முன்னறிவிப்பின்றி கடமைக்கு சமுகமளிக்காதமையினாலும், சில சந்தர்ப்பங்களில் சேவையிலிருந்து விலகியதை அறிவிப்பதற்கு ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் எடுத்துக்கொள்வதனாலும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரி ஒருவரது பதவி தொடர்பான இராஜினாமா அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், அது குறித்து தவறு மன்னிப்புக் கோருவதற்குரிய செயல்விளக்கம் வழங்கப்படுமாயின், அது அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரிவு 216 இன் கீழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்,

மேலும், சுய விருப்பத்துக்கமைய சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் முன்வைப்பது குறித்தும் சம்பந்தப்பட்ட ஒழுக்க நடைமுறை குறித்தும் விசாரணை அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு சுனில், ஹர்ஷன கூறவேண்டும்

## ஜனாதிபதி வேட்பாளர் ரணில் கருத்து

கொழும்பு, செப். 12

**திசைகாட்டியின் பொருளாதாரக் கொள்கை ஏற்றுமதிப் பொருளாதாரமா அல்லது இறக்குமதிப் பொருளாதாரமா என்று கேட்டதற்குப் பதிலளிக்காத அநுர திஸாநாயக்க, தன்னை விவாதத்திற்கு அழைப்பதாகவும் தன்னுடன் விவாதத்திற்கு வர முன்னர் அநுர, சுனில் ஹந்துன்நெத்தி, ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் தனியாக விவாதம் நடத்தி நாட்டுக்குத் தமது சரியான பொருளாதாரக் கொள்கையைச் கூற வேண்டும் எனவும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



குருநாகலில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற குருநாகல் மாவட்ட அறிஞர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினருடான கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தாம் முன்னர் குறிப்பிட்டது போல், அநுரவும், தானும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பங்கேற்கும் காணொளி உரையாடலுக்கு நேரத்தை ஒதுக்க முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில், யாருக்கும் பேச இடமளிக்காமல் பேசக்கூடிய

சஜித்தையும் இதற்கு அழைக்கலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், 8,900 பில்லியன் ரூபாய் செலவும், 4,900 பில்லியன் ரூபாய் வருமானமும், 4,000 பில்லியன் ரூபாய் பற்றாக்குறையும் கொண்ட நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும் கொள்கைப் பிரகடனத்தை அனுரகுமார திஸாநாயக்க ஏன் தனது விஞ்ஞாபனத்தில் வெளியிட்டுள்ளார் என்று கேள்வி எழுப்பிய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, மேடைகளில் பொய்யாகக் கூச்சல் எழுப்பாமல் தமது சரியான பொருளாதாரக் கொள்கையை நாட்டுக்கு முன்வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு, உரம் இன்றி மக்கள் தவிக்கும்போது சஜித்துக்கும் அநுரவுக்கும் மக்களுக்காக வருத்தமும் வேதனையும் ஏற்படவில்லையா? மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லையா? அவர்கள் அப்படிச் செய்திருந்தால் இன்று நான் இங்கு இருந்திருக்க மாட்டேன். அவர்கள் தமது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத காரணத்தினால்தான், ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க நேர்ந்தது.

எனக்குப் பல அரசியல் கட்சிகளின் ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகும்போது சபாநாயகரை தற்காலிக ஜனாதிபதியாக நியமித்து தேர்தலுக்குச் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? அதிகார இடைவெளியை உருவாக்கியிருந்தால் இன்று வங்கதேசம் இருக்கும் நிலையில் நாமும் இருக்க வேண்டியிருக்கும்.

நாட்டின் பொறுப்பை ஏற்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தோம். அடுத்த ஆண்டு, மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். நாடு முழுவதும் முதலீட்டு வலயங்களை உருவாக்குவதோடு, விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறோம். இளையோருக்கான தொழில் வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மீறி சந்தையில் பணம் வாங்கினால், வட்டி 25 வீதமாக இருக்கும். இப்படியான மாற்றத்தையா அவர்கள் எதிர்பார்க்கின்றனர்?

அதனால் டொலரின் பெறுமதி 500 ரூபாயாக உயர்வடையும். சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனைகளை மீறிவிட்டால் அவர்களின் ஆதரவு இரத்தாகும். அதனால் நாட்டின் பொருளாதாரம் சரிவை நோக்கி நகரும்-என்றார். (அ)

# பொது வேட்பாளரை ஆதரித்து ஊர்காவற்றுறையில் பிரசாரம்

யாழ்ப்பாணம், செப். 12

பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து யாழ்ப்பாணம் - ஊர்காவத்துறையிலும் நேற்று முன் தினம் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பகுதியில் நேற்று பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் பொது வேட்பாளர் அதிக வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என மெலிஞ்சிமுனை, புளியங்கூடல், பருத்தியடைப்பு நாரந்தனை போன்ற இடங்களில் பிரசார நடவடிகைகள் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு மாகாண மீனவ அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த தேர்தல் பிரசாரத்தில் அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா, கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினர். (அ)

# ரணில் தன் தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளார்!

## எஸ்.எம்.மரிக்கார் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 12

ரணில் விக்கிரமசிங்க அவரது தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளார். அனுர குமார திஸாநாயக்கவை வெற்றியாளராக மாற்ற அவர் தயாராகியுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க அவரது தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளார். அனுர குமார திஸாநாயக்கவை வெற்றியாளராக மாற்ற அவர் தயாராகியுள்ளார்.

கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்ட ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுதிப்பாட்டினை பூச்சியமாக்கினார். அதேபோன்று தற்போது அனுரகுமார திஸாநாயக்கவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அவருக்கே வாக்களிக்க இருந்ததாகவும் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இதன் மூலம் சஜித்துக்கு வாக்களிக்க வேண்டாம் என மறைமுகமாக கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒருபோதும் மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்கப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு துரோகமிழைக்காத குழுவொன்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளது.


இதன்காரணமாக, ஐக்கிய தேசிய கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் எங்களுடன் இணைந்துகொள்ள வேண்டும்-என்றார். (அ)

# அடுத்த 10 வருடங்களுக்குள் 20 இலட்சம் வேலைவாய்ப்பு

## நாமலின் புதிய திட்டம் இது

கொழும்பு, செப். 12

அடுத்த 10 வருடங்களுக்குள் 20 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் தன்னிடம் இருப்பதாக சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரிசையை அகற்றும் அளவுக்கு நமது நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பை மாற்றி வருகிறோம்.

தொழில்நுட்பம் ஊடாக வெளிப்படைத்தன்மை மற்றும் தரமான பாதுகாப்பு திட்டத்தை உருவாக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

நாங்கள் கொடுக்கல் வாங்கல்களை சர்வதேசத்துடன் மேற்கொள்கிறோம். இந்த நாட்டின் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளின் பொருளாதாரத்தை பாதுகாப்பதற்காக நாங்கள் அதனை கையாள்கின்றோம்.

அது தகவல் தொழில்நுட்பத் துறையாக இருக்கலாம், முதலீடு மற்றும் உற்பத்தித் துறையாக இருக்கலாம், சேவைத் துறையாக இருக்கலாம், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைகளாக இருக்கலாம், அடுத்த 10 ஆண்டுகளில் உங்கள் குழந்தைக்கு 20 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் சவாலை ஏற்றுக்கொள்கிறேன்-என்றார். (அ)

# 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதனால் நாட்டின் பொருளாதாரம் மீண்டெழுந்துவிடுமா?

## விமல் வீரவன்ச கேள்வி

கொழும்பு, செப். 12

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதால் இந் நாட்டு பொருளாதாரம் மீண்டெழுந்துவிடுமா." - என்று கேள்வி எழுப்பியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

சட்டத்தின் ஆட்சி நடைபெறாத நாடாக பங்களாதேஷ் மாறியுள்ளது. இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலைமையை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றனர்.

அதனால்தான் மேற்குலகத்துக்கு தேவையான யோசனைகள் மூன்று தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த மூவரில் யார் வெற்றி பெற்றாலும் தமது நோக்கம் நிறைவேறும் என மேற்குலகம் நம்புகின்றது.



உள்ளாடைகளில் ஒட்டை இருப்பதுதான் தேசிய பிரச்னையா? இது பற்றிதான் தற்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கதைக்கின்றனர். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குரிய வழிமுறைகள் பற்றி கதைக்கப்படாதது ஏன்? சர்வஜன கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமே இதற்குரிய தீர்வு உள்ளது.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவுக்கு உயிர் கொடுக்க வேண்டுமெனில், படையினரை பழிகடாவாக்க வேண்டுமெனில் மாற்று தரப்பினருக்கு வாக்களியுங்கள். படையினர் உயிர் தியாகம் செய்து காத்த நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில் எமது அணி வேட்பாளருக்கு வாக்களியுங்கள்.

வடக்குக்கு சென்று 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் எனக் கூறுபவர்களுக்கு இந்நாட்டை கட்டியெழுப்ப முடியுமா? 13 ஐ அமுல்படுத்துவதால் பொருளாதாரம் மீண்டுவிடுமா? பொலிஸ் அதிகாரம் வழங்குவதால் பொருளாதாரம் எழுந்துவிடுமா? விழுந்த பொருளாதாரத்துக்கு உயிர் வருமா? எனவே, காட்டிக் கொடுப்புகளை நிறுத்த வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர வேண்டும்!

## கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ்



கிளிநொச்சி, செப். 12

**நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி தொடர வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் தவறவிடும் பட்சத்தில் அடுத்த ஐந்து வருடங்கள் அதனை நிவர்த்தி செய்வதற்காக காத்திருக்க வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சரியான முடிவை எடுக்க வேண்டும். உண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி தொடர வேண்டும்.

அப்போதுதான் கடந்த இரு வருட வளர்ச்சியை தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடியும். இன்றேல் அதளபாதாளத்தில் நாடு வீழும்.

அதனை உணர்ந்து ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்ய வேண்டும். எங்களை நம்பி உங்கள் வாக்குகளை அளியுங்கள். கட்சி என்ற ரீதியில் அதற்கு நாம் பொறுப்பாக இருப்போம்.

நமது அரசியல் தலைமைகள் தென்னிலங்கை ஆட்சியாளர்களுடன் உறவை வைத்துக் கொண்டு தமது சுயலாபங்களை பெற்ற பின்னர் அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று மக்களை பலர் ஏமாற்றுவார்கள் நாம் அவ்வாறு ஒருபோதும் சொல்ல விரும்பவில்லை.

நாம் சொல்வதைத் தான் செய்வோம். ஜனாதிபதியின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# மாற்றத்துக்காக செயல்படுகிறோம்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

நாட்டை இருக்கும் இடத்தில் இருந்து மாற்றுவதற்கு தாங்கள் செயற்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரம் மட்டுமின்றி கல்வி, ஒழுக்கம், சட்டம், கலாசாரம், மனிதநேயம் போன்றவற்றிலும் நாடு வளமாக இருக்க வேண்டும்.

தற்போது சமூகத்தில் பொலிஸ் மீது நல்ல அணுகுமுறை இல்லை.

நல்ல மனப்பான்மையுடன் கூடிய நட்பு பொலிஸாக மாற்ற வேண்டும். குற்றங்கள் இல்லாத நாடு உருவாக வேண்டும்.

மோசடி, ஊழல், வீண் விரயம், இல்லாத அரசியல் சலுகைகளை பயன்படுத்தாத அரசாங்கம் நிரந்தரமாக கட்டியெழுப்பப்படும்.

நாட்டின் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும், போக்குவரத்து, கல்வி போன்ற துறைகளில் தற்போதுள்ள நிலைமை மாற்றப்பட வேண்டும்.

குழந்தைகள் பாதுகாக்கப்படும், பெண்கள் மதிக்கப்படும் மற்றும் பாதுகாக்கப்படும் ஒரு நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும்-என்றார். (அ)

# ரணில், அநுர இடையே டீல்!

## சஜித் சொல்கிறார்

ரணிலும் அநுரவும் சிறந்த அரசியல் டீல் ஒன்றை செய்திருக்கின்றனர். அவர்களுடைய டீல் தொடர்பில் எனக்கு பிரச்னை இல்லை. எனக்கு 220 இலட்சம் மக்களுடனே டீல் இருக்கின்றது - என்று புத்தளத்தில் நடந்த பரப்புரை கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சோசலிசம் குறித்து கதைக்கின்ற அநுரகுமார, ரணில் விக்கிரமசிங்க உடன் டீல் செய்திருக்கின்றார். இவர்கள் நாட்டை கட்டியெழுப்பாமல் அவர்களின் முன்னேற்றத்திற்காகவே டீல் செய்திருக்கின்றார்கள்.

அவர்கள் இருவருக்கும் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை பிரித்து கொண்டுள்ளனரா என்ற சந்தேகம் தனக்குள்ளதாகவும் சஜித் கூறினார். (ஐ)

# தமிழ் பொது வேட்பாளர் போட்டி சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல!

## ரெலோ கட்சி தெரிவிப்பு

வடமராட்சி, செப். 12

தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக, இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர் கொண்டுவரும் பிரச்னைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது என்று ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மாலைசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ்த் தேசியம் இன்று பலவாறாக அகத் துண்டாடலுக்கு உட்பட்டு வருகிறது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளியுலகுக்கும் ஆட்சியில் அமர்பவர்களுடன் பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான நிலைமைகளை பலமிழக்க செய்துவிடுமோ என்ற நியாயபூர்வமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த அச்சத்தில் நியாயபூர்வமான யதார்த்தம் உள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனமான நாம் எமது அரசியல் அபிலாசைகளை சாதாரண ஜனநாயக உரிமைகளுடன் மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எமது அரசியல் அபிலாசைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து தமிழ் பொது வேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கடமையை நிறைவேற்றுவோம்- என்றார். (ஐ-02)

# வடக்குக்கு சென்று வாக்கு கேட்பதற்கு அநுர தரப்பினருக்கு உரிமை கிடையாது

## ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 12

இலங்கை, இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாணசபை முறைமைக்கு எதிராக அன்று ஜே.வி.பி.யினர் போர்க்கொடி தூக்கிய நிலையில் வடக்குக்கு சென்று வாக்கு கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தச்சட்டம்



கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக மக்களை கொன்ற கட்சிதான் ஜே.வி.பி. அந்தக் கட்சியினர் வடக்குக்கு சென்று வாக்கு கேட்கும் உரிமை கிடையாது.

வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்திகளை செய்யக் கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸவே.

வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர்-என்றார். (அ)

# 2005இல் மகிந்தவுக்கு கடனாக வழங்கிய பணம் இதுவரையில் கிடைக்கவில்லை!

## அநுரகுமார சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 12

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார செயற்பாடுகளுக்காகக் கடனாக வழங்கிய பணம் இதுவரையில் கிடைக்கவில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆரம்பத்தில் சாதாரண உந்துருளிகளில் பிரசார செயற்பாடுகளுக்காகச் சென்றவர்கள் இன்று பல இடங்களில் மாளிகைகளை அமைத்துள்ளனர்.

தற்போது சாதாரண மக்கள் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனினும் அரசியல் தரப்பினர் ஒரு ஒப்பந்தத்தினூடாக கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் வீடுகளைக் கொள்வனவு செய்கின்றனர்.

அவ்வாறானவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு ஒரு தொகை தரகு பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? என்பது தொடர்பிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

2005ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலுக்கான இறுதி துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதற்குப் பணம் இருக்கவில்லை.

நாம் கடனாகக் குறித்த பணியை முன்னெடுத்திருந்தோம்.

எனினும் இதுவரையில் அந்த கடன் தொகை செலுத்தப்படவில்லை.

அவ்வாறானவர்கள் பின்னர் உலக நாடுகளிலும் இலங்கையின் பல பகுதிகளிலும் வீடுகளையும் மாளிகைகளையும் நிர்மாணித்துள்ளனர்-என்றார். (அ)

# "லசந்த, தாஜுதீனை கொலை செய்தவர்கள் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுகின்றனர்"

கொழும்பு, செப். 12

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவையும் வாசிம் தாஜுதீனையும் கொலை செய்தவர்கள் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என சி.ஐ.டி.யின் முன்னாள் தலைவர் ரவி செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இருவரும் அரசியல் நோக்கங்களுக்காக கொலை செய்யப்பட்டனர் என அவர் கூறினார்.

குருநாகலில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

வாசிம் தாஜுதீன் படுகொலை விசாரணைகளை அவ்வேளை ஆட்சியிலிருந்தவர்கள் தடுத்தனர் என அவர் குறிப்பிட்டார்.

பொலிஸார் அந்த கொலை குறித்து உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவ்வேளை ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தரத்தில் மட்டக்களப்பில் கிரிக்கெட் மைதானம் அமைப்போம்

## சந்திரகாந்தன், மௌலானா உறுதி

மட்டக்களப்பு, செப். 12

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர்களான சி. சந்திரகாந்தன், அலிசாகிர் மௌலானா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.**

கல்லடி சிவானந்த தேசிய கல்லூரி மைதானத்தில் நடந்த கிரிக்கெட் இறுதிப் போட்டியில் விருந்தினர்களாக பங்கேற்றனர். இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரர்களுக்கு ஏற்ற நல்ல விளையாட்டு மைதானம் இல்லை என்ற குறை ஏற்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்டது. அத்துடன், இது தொடர்பில் இரு அமைச்சர்களிடமும் மனுக்கள் கையளிக்கப்பட்டன. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு உறுதியளித்தனர்.

அத்துடன், சிறீ லங்கா கிரிக்கெட் சபையால் முன்னர் ஒதுக்கப்பட்ட 26 ஏக்கர் நிலப் பரப்பில் கிரிக்கெட் மைதானத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இதற்கு தாங்கள் இருவரும் முழு ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். (ஐ)

# தேர்தல் அறிக்கைகளில் கிழக்கின் பிரச்னைகள்!

## மட்டக்களப்பில் செயலமர்வு



மட்டக்களப்பு, செப். 12

கிழக்கு மாகாண பிரச்னைகளை மையப்படுத்திய தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று புதன்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தால் இந்த செயலமர்வு நடத்தப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வளவாளராக சட்டத்தரணி அசாத் முஸ்தபா பங்கேற்றார். சமூக மட்டத்தில் செயல்படுகின்ற அமைப்பினர், கிராம மட்ட குழு பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் செயமலர்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# பொது வேட்பாளருக்கு ஆதரவு அலை; தென்னிலங்கை வேட்பாளர்கள் அச்சம்!

## அரியநேத்திரன் தெரிவிப்பு

அக்கரைப்பற்று, செப். 12


தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டதன் பின்னர் தெற்கில் உள்ள பிரதான வேட்பாளர்கள் தெற்கில் பிரசாரங் களை முன்னெடுக்காமல் வட, கிழக்கில் முகாமிட்டு வருகின்றனர். தமிழ் மக்கள் திரட்சி கண்டு அவர்கள் அச்சமடைந்துள்ளனர் என்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பு வாகரையில் நேற்று முன்தினம் முன்னெடுத்த பரப்புரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இதன்போது உரையாற்றிய பொது வேட்பாளர், இந்த தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் வெற்றிபெறவேண்டும் என்று வடக்கு கிழக்கில் மக்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

தென்பகுதி வேட்பாளர்கள் அங்கு பிரசாரம் செய்வதை காணமுடியவில்லை. அவர்கள் இப்போது வட, கிழக்கில் முகாமிட்டுள்ளனர் என்றால் மக்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும் அவர்களுக்கு ஓர் அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் திரட்சியாக ஒற்றுமையாக இருக்கின்றார்கள். அவர்களை நாங்கள் இனி சிதறடிக்க முடியாது என்று என்னை வேட்பாளராக நிறுத்திய பின்னர் அவர்கள் அச்சமடைந்துள்ளார்கள் - என்றார். (ஐ)



# காட்டுயானைகளால் இரு வீடுகள் சேதம்!

திருகோணமலை, செப். 1

கிண்ணியா - ஆயிலியடி கிராமத்தில் யானைகள் ஊர்மனைக்குள் புகுந்து இரு வீடுகளை சேதப்படுத்தின. அத்துடன், வீடுகளில் வைக்கப்பட்டிருந்த விதைநெல் மற்றும் பயன்தரு மரங்களையும் அழித்துச் சென்றுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியாவில், இரவு நேரங்களில் யானை வருவதனால் இக்கிராம மக்கள் தமது தொழில்களை சரிவர செய்ய முடியாதுள்ளது. அத்துடன், தமது பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இரவு நேரங்களில் வெளியில் நடமாட முடியாத நிலைமை உள்ளது. எனவே, யானைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# தற்கொலைகளை தடுக்க மட்டக்களப்பில் உரையாடல்!

மட்டக்களப்பு, செப். 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் தற்கொலைகளை தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கல்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சனி சிறீகாந்த், மருத்துவர்கள் டான் சௌந்தரநாயகம்,



அச்சுதன், வலயக்கல்வி அலுவலக உத் தியோகத்தர் ஜெகநாதன் உட் பட துறைசார் திணைக்கள தலைவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# உடைமைகளை இழந்த குடும்பத்துக்கு உதவிகள்




அக்கரைப்பற்று, செப். 12

கடந்த மாதம் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் வீடு எரிந்து உடைமைகளை இழந்தவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஒலுவிலை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கே இந்த உதவிகள் இணைந்த கரங்கள் அமைப்பால் வழங்கி வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நிந்தரவூர் ஆதார மருத்துவமனைக்கு மருத்துவ இயந்திரங்கள் வழங்கல்!

நிந்தவூர், செப். 12

நிந்தவூர் ஆதார மருத்துவமனையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு மயக்க மருந்து இயந்திரம், மகப்பேற்று விடுதிக்குரிய சி. ரி. ஜி. இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

பி. எஸ். டி. ஜி. வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 10 மில்லியன் ரூபாயில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகரும், மகப்பேற்று மருத்துவ நிபுணருமான மருத்துவர் எம். எஸ். எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி [illegible] அதிதியாகக் கலந்து கொண்டு [illegible] உபகரணங்களை வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி எம். சீ. எம். மாஹிர், பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என். எம். இப்ஹாம், மருத்துவமனையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்களின் மூலம் அமெரிக்காவை தாக்குவோம்

## வடகொரிய ஜனாதிபதி எச்சரிக்கை
## போருக்கு தயாராகுமாறு படைகளுக்கும் உத்தரவு

பியோங்யாங், செப். 12

**அமெரிக்காவுக்கு எதிராக போருக்கு தயராக வேண்டும். போரில் அதிகளவான அணு ஆயுதங்களுக்கு தேவை இருக்கும் என்பதால் அவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.**



வடகொரியா நிறுவப்பட்ட தன் 76ஆவது ஆண்டு நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இராணுவ அணிவகுப்பு மரியாதையை நிகழ்வில் ஏற்றுக் கொண்ட அவர், "அமெரிக்காவின் செயல்பாடு நாளுக்கு நாள் அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் உள்ளது. இதனால் அமெரிக்காவுடன் எப்போது வேண்டுமானாலும் போருக்கு தயாராக இருக்க வேண்டும். போரில் அதிகளவிலான அணு ஆயுதங்களுக்கு தேவை இருக்கும் என்பதால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்" என்று கூறினார்.

வடகொரியா ஏற்கனவே தென்கொரியாவை எதிரி நாடாக அறிவித்து எந்த நேரத்திலும் போருக்கு தயாராக இருக்கும் படி தனது இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில், தென்கொரியா, ஜப்பானை அச்சுறுத்தும்விதமாக அந்த நாடு அணு ஆயுத ஏவுகணைகளை பரிசோதித்து வருகிறது.

இதற்கு பதிலடியாக தென் கொரியாவுடன் இணைந்து போர் பயிற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையிலேயே வடகொரியா ஜனாதிபதி அமெரிக்காவை அச்சுறுத்தும் விதமாக உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் ஆலோசனை வழங்கத் தயார்!

## இந்திய வெளிவிவகார அமைச்சர்



பெர்லின், செப். 12

உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டுவர இரு நாடுகளுக்கும் இந்தியா ஆலோசனைகளை வழங்கத் தயாராக உள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.


ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அமைதிப் பேச்சில் இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் மத்தியஸ்தர்களாக செயல்பட முடியும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்திருந்தார்.

இதே கருத்தை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் கூறியிருந்தார்.

இந்நிலையில், ஜேர்மனியில் நடந்த நிகழ்வு ஒன்றில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகையில்,

இந்த மோதல் போர்க்களத்தில் தீர்க்கப்படும் என நினைக்கவில்லை. ஒரு கட்டத்தில் பேச்சு நடக்கும். பேச்சு நடக்கும்போது ரஷ்யா மற்றும் உக்ரைன் அந்தப் பேச்சில் இருக்க வேண்டும்.

போர்க்களத்தில் இருந்து நீங்கள் ஒரு தீர்வைப் பெறப் போகிறீர்கள் என நாங்கள் நினைக்கவில்லை. நீங்கள் பேச்சு நடத்த வேண்டும் என நாங்கள் நினைக்கிறோம். உங்களுக்கு ஆலோசனைகள் தேவைப்பட்டால், நாங்கள் எப்போதும் அதை வழங்க தயாராக இருக்கிறோம் - என்றார். (ஐ)



# அணுமின் கழிவுகளை அகற்ற நவீன ரோபோ களமிறக்கம்!

ரோக்கியோ, செப். 12

ஜப்பானில் அணுமின் கழிவுகளை அகற்ற நவீன ரோபோ களத்தில் இறக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தக் கழிவுகளை அகற்றி முடிக்க 40 ஆண்டுகள் செல்லும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பானில் 2011ஆம் ஆண்டு நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்பட்டது. இதனால் அங்குள்ள புகுஷிமா அணுமின் நிலையம் சேதம் அடைந்தது. அணுமின் நிலையத்திற்குள் கடல்நீர் புகுந்து அங்குள்ள அணுஉலைகள் கடுமையான சேதத்தை சந்தித்தன. இதனால் அதன் செயல்பாடு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. அணுஉலைகளில் ஏற்பட்ட சேதம் காரணமாக அணு கழிவுகள் அங்கு தேங்கி கிடக்கின்றன.

இந்த கழிவுகள் மனிதனுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அவற்றை அகற்ற ஜப்பான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும், அந்த முயற்சிக்கு இன்னமும் வெற்றி கிடைக்கவில்லை.

இந்தநிலையில் அங்குள்ள அணுஉலை கழிவுகளை அகற்ற நவீன ரோபோ தற்போது பயன்படுத்தப்படுகிறது.

அணு உலையில், 3 தொன் அளவில் கழிவுகள் இருக்கலாம் என கருதப்படுகிறது. கதிரியக்க அளவை அறிந்த பின்னர் முழு வீச்சில் இந்த பணி தொடரும் என்றும் இதனை அகற்ற 40 ஆண்டுகள் வரை ஆகலாம் எனவும் ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

# சூறாவளியால் வியட்நாமில் உயிரிந்தோர் 127ஆக உயர்வு

ஹனோய், செப். 12

வியட்நாம் நாட்டை தாக்கிய யாகி சூறாவளியால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 127ஆக உயர்ந்துள்ளது. அத்துடன், 50இற்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்று அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வியட்நாம், பிலிப்பைன்ஸ், சீனாவை யாகி சூறாவளி கடந்த சனிக்கிழமை தாக்கியது.


இதனால், 21 பேர் உயிரிழந்தனர். 176 பேர் காயமடைந்தனர் என்று அந்த நாட்டு அரசாங்கம் முதல் கட்டமாக அறிவித்தது.

இந்த நிலையில், சூறாவளியை தொடர்ந்து பெய்து வரும் மழை, வெள்ளத்தால் 127 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டவர்களை காணவில்லை. நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர் என்று வியட்நாம் அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

# ட்ரம்ப் - கமலா ஹாரிஸ் அனல் பறந்த விவாதம்!

வாஷிங்டன், செப். 12

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களத்தில் அதிமுக்கியமான டொனால்ட் ட்ரம்ப் - கமலா ஹாரிஸ் நேரடி விவாதம் நேற்று நடந்தது. அமெரிக்க பொருளாதார நிலவரம் முதல் கருக்கலைப்பு சட்டம் வரை அனல் பறக்கும் விவாதம் நடைபெற்றது.



எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இதில் குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் போட்டியிடுகின்றனர். இதுவரையிலான கருத்துக் கணிப்புகள் பலவும் கமலா ஹாரிஸூக்கு சற்றே வெற்றி வாய்ப்பு கூடுதலாக இருப்பதாக சுட்டிக் காட்டும்சூழலில் இந்த விவாதத்துக்குப் பின்னர் அதன் போக்கு எப்படி மாறுகிறது என்பது தெரிய வரும். இதனால் டொனால்ட் ட்ரம்ப் - கமலா ஹாரிஸ் நேரடி விவாதம் சர்வதேச கவனம் பெற்றது.

விவாதத்தைத் தொடங்கிய ஜனநாயக கட்சி ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ், ட்ரம்ப் ஆட்சியின் கீழ்தான் அமெக்கா மிகப் பெரிய வேலை வாய்ப்பின்மை சிக்கலை எதிர்கொண்டது. அமெரிக்க பொருளாதாரத்தின் பெரும் மந்தநிலை காலத்துக்குப் பின்னர் மோசமான வேலை வாய்ப்பின்மை சிக்கல் ட்ரம்ப் ஆட்சியில்தான் நிகழ்ந்தது. ஆனால் நான் ஜனாதிபதியானால் அந்த நிலை மாற்றப்படும். அமெரிக்காவில், வாய்ப்புகளைத் தரும் பொருளாதாரத்தை கட்டமைக்க விரும்புகிறேன். அமெரிக்காவில் வீட்டு வசதியை கையடக்க விலைக்குக் கொண்டு வருவேன். குழந்தை வரிக்கடன் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். ட்ரம்ப் அதிபரானால் அவர் ட்ரம்ப் சேல்ஸ் டேக்ஸ் கொண்டு வருவார். அதாவது [illegible]டம் நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் 20 சதவீதம் வரி விதிக்கப்படும் -என்றார்.

இதனை மறுத்த ட்ரம்ப், தனது ஆட்சிக் காலத்தில்தான் அமெரிக்கப் பொருளாதாரம் மிக செழிப்பாக இருந்தது என்றார்.

கருக்கலைப்பு உரிமை பற்றி பேசிய அவர், "ட்ரம்ப் ஜனாதிபதியானால் தேசம் தழுவிய கருக்கலைப்பு தடை நடைமுறைக்கு வரும். பாலியல் வன்கொடுமைகள், நெருங்கிய குடும்ப உறவுகளுக்கு இடையேயான தகாத பாலுறவு மூலம் உருவாகும்கருவை கலைப்பது கூட ட்ரம்ப் ஆட்சி அமைந்தால் கடினமாகிவிடும். அதனால் ட்ரம்ப்பை ஆதரிக்கக் கூடாது." என்றார்.

அப்போது ட்ரம்ப், "சில மாகாணங்களில் குழந்தைகள் பிறந்தபின்னர் கொல்லப்படுகின்றனர். ஜனநாயக கட்சி 9ஆவது மாதத்தில் கூட கருக்கலைப்பை அனுமதிக்க வேண்டும் என விரும்புகிறது." என்றார்.

ரஷ்யா - உக்ரைன் போர் 31வது மாதமாக நீடித்துவரும் நிலையில் அது குறித்துப் பேசிய கமலா ஹாரிஸ், "எங்களுக்கும் ஜெலன்ஸ்கிக்கும் இடையே நல்லுறவு இருக்கிறது. நல்ல வேளை இந்த போர் மூண்ட தருணத்தில் நீங்கள் (ட்ரம்ப்) ஜனாதிபதியாக இருக்கவில்லை. இல்லாவிட்டால் இந்நேரம் புடின் கீவ் நகரில் அமர்ந்து கொண்டு ஐரோப்பிய நாடுகளை எப்படித் தாக்குவது என்று திட்டம் தீட்டிக் கொண்டு இந்திருப்பார். புடின் ஒரு சர்வாதிகாரி. அவர் உங்களை மதிய உணவாக புசித்துவிடக்கூடும்" என்றார்.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், "கமலா ஹாரிஸ்தான் அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான துணை ஜனாதிபதி. உக்ரைன் - ரஷ்யப் போரை அவர் தடுக்கத் தவறிவிட்டார்" என்றார்.

"இஸ்ரேல் தாக்குதலில் 40 ஆயிரம் பாலஸ்தீனர்கள் இறந்துவிட்டனர். நான் மட்டும் அதிபராக இருந்திருந்தால் இந்தப் போர் மூண்டிருக்காது. கமலா ஹாரிஸூக்கு இஸ்ரேல் மீது கடும் வெறுப்பு உண்டு. அவர் அமெரிக்க ஜனாதிபதியானால் இரண்டு ஆண்டுகளில் இஸ்ரேல் என்ற நாடே இல்லாமல் போய்விடும்" என்றார்.

"ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். அவர் பிரச்னையை திசைதிருப்பி, பிரித்தாள முயற்சிக்கிறார். அவருக்கு எப்போதுமே சர்வாதிகாரிகள் மீது அபிமானம் உண்டு என்பது அனைவரும் அறிந்ததே. அவர் தன்னையே ஒரு சர்வாதிகாரியாக பார்க்கவே விரும்புகிறார்" என்று பதிலடி கொடுத்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பாராளுமன்றைக் கைப்பற்ற முற்பட்டமை தவறான முடிவு!

## வசந்த முதலிகே கருத்து

கொழும்பு, செப். 12

"அறகலயவின்போது பாராளுமன்றத்தைக் கைப்பற்று வதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சி தவறான அரசியல் தீர்மானமாகும். அதனை நாம் அனுமதிக்கமாட்டோம்." - என்று மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவருமான வசந்த முதலிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அறகலய காலத்தில் பல போராட்டக்காரர்கள் இருந்த னர். காலி முகத்திடம் செயற் பாட்டுக்குழு என ஒன்று இருந் தது. அக்குழுவே முடிவுகளை எடுத்தது. பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவது தொடர்பில் இக்குழுவில் எந்தவொரு முடி வும் எடுக்கப்படவில்லை.

ஒரு சிலரின் தேவைக்காக பாராளுமன்றத்தைக் கைப்பற் றுவதற்கு முயற்சி எடுக்கப்பட் டிருக்கலாம். அது காலி முகத்தி டல் செயற்பாட்டுக்குழுவின் நடவடிக்கை அல்ல. அது அர சியல் ரீதியில் தவறானதொரு முடிவாகும். அது கூட்டு முடிவு இல்லை என்பதால் நாம் உடன் படவில்லை.

வன்முறையை என்றும் நாம் எதிர்க்கின்றோம். ஏப்ரல் 9 நாம் போராட்டக் களத்துக்கு வந் தோம். மே 9 ஆம் திகதிவரை எதுவும் நடக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ தரப்புதான் வன்மு றையை தூண்டியது. அதற்கு தான் மக்கள் தரப்பில் இருந்து பதில் வழங்கப்பட்டது-என் றா ர். (அ)

# 80 வீத வாக்குச்சீட்டு விநியோகம்

கொழும்பு, செப். 12

80 வீத வாக்குச்சீட்டுகள் மாவட்ட தேர்தல் அலுவலகங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

விசேட பாதுகாப்புடன் அவை அனுப்பி வைக்கப்பட்ட தாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் பணி களை இவ்வார இறுதிக்குள் நிறைவு செய்ய திட்டமிட்டுள் ளதாக அரச அச்சகம் தெரிவித் துள்ளது.

இதேவேளை, உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன. (அ)

# ரயில் மோதி பெண் பலி!

வவுனியா, செப். 12

வவுனியா - ஓமந்தை பகுதி யில் ரயிலில் மோதுண்டு பெண் ஒருவர் உயிரிழந்ததாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை யாழ்ப்பா ணத்திலிருந்து வவுனியா நோக் கிப் பயணித்த ரயில் புளியங்கு ளம் பகுதியில் சென்றுகொண் டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்ததாகத் தெரிவிக்கப்படு கின்றது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (அ)

# செப்.15 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று முதல் வகுப்புகளுக்கு தடை

கொழும்பு, செப். 12

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலை யில், பரீட்சையை முன்னிட்டு நேற்று நள்ளிரவு முதல் அமு லுக்கு வரும் வகையில் பயிற்சி வகுப்புகள், செயலமர்வுகள் என் பன தடை செய்யப்பட்டுள்ள தாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சையுடன் தொடர்பு டைய அனைத்து பயிற்சி வகுப் புகள், விரிவுரைகள், கருத்தரங் குகள் மற்றும் செயலமர்வுகளுக்கு தடை விதிக்கப்படும் என பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள் ளார்.

சுவரொட்டிகள், பதாதை கள், துண்டுப் பிரசுரங்கள் மற் றும் மின்னணு, அச்சிடப்பட்ட அல்லது சமூக ஊடக தளங்க ளில் உள்ளடக்கம் போன்ற விளம்பரங்களை வெளியிடுவது, யூக கேள்விகள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகிப்பதும் தடைசெய் யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவு றுத்தியுள்ளார். (அ)

# 470 கிலோ மஞ்சள் மீட்பு!

கொழும்பு, செப். 12

புத்தளம் - சேரக்குளிய கடற் கரை பகுதியில் 470 கிலோ கிராம உலர்ந்த மஞ்சள் கடற்ப டையினரால் மீட்கப்பட்டுள்ளன.

புத்தளம் - சேரக்குளிய கடற் கரை பகுதியில் கடல் மார்க்க மாக சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்ப டும் உலர்ந்த மஞ்சள் அடங்கிய 14 மூடைகள் கடற்படையின ரால் மீட்கப்பட்டுள்ளன.

சேரக்குளிய கடற்கரை பகு தியில் கடற்படையினரால் மேற் கொள்ளப்பட்ட தேடுதல் நடவ டிக்கையில், கடல் மார்க்கமாக இலங்கைக்கு சட்டவிரோதமாக கடத்த முயற்சி... சட்டவிரோதமாக... மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட உலர் மஞ் சள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்ப டையின் காவலில் வைக்கப்பட் டுள்ளன. (அ)

# நூலக தகவல் விஞ்ஞான கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

யாழ்ப்பாணம், செப். 12

வடபுலத்தின் உயர்கல்வி யின் மகுடமாக திகழ்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவ்வருடம் தனது 50 வருட நிறைவினைக் கொண்டாடுகி றது. இலங்கையின் வடபுலத் தில் குறிப்பாக தமிழ் மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் உயர்கல்வி நிறுவனமான யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் இப்பொன்விழா ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தால் "அறிவு வலுவூட்டல்: உயர்ச்சி யின் உந்துசக்திகளாக நூலகங் கள்" எனும் தலைப்பிலான நூலக தகவல் விஞ்ஞான கருத்தரங்கா னது இம்மாதம் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழ கத்தின் துணைவேந்தர் பேராசி ரியர் சி.சிறிசற்குணராஜா தலை மையில் நூலக கேட்போர்கூ டத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கானது வித்தி யானந்தன் நூலகத்தால் நடாத் தப்படுகின்ற "ஏடகம்" அறிவுப் பகிர்வு மாநாட்டின் தொடர்ச்சி யாகும். இத்தருணத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் முதலா வது துணைவேந்தராகிய மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் 100ஆவது பிறந்த தினத்தையும் நினைவு கூருவது இம்மாநாட்டின் சிறப்பம்சமா கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்க ழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டின் ஒரு அங்கமான இக்கருத்தரங்கின் முதன்மை உரையினை சென்னையிலுள்ள ரோஜா முத்தையா ஆய்வு நூல கத்தின் பணிப்பாளர் கலாநிதி. சுந்தர் கணேசன் "தெற்காசியா வின் அறிவு வளங்களை ஆவண மாக்கல்" என்ற தலைப்பில் நிகழ்த்தவுள்ளதுடன், 20இற்கு மேற்பட்ட ஆய்வாளர்களின் நூலகம் மற்றும் ஆவணவாக் கம் சார் செயற்றிட்டங்கள் நான்கு இருக்கைகளில் சமர்ப் பிக்கப்படவுள்ளன. அத்துடன், உள்ளூர் புத்தக விற்பனையாளர் களின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இக்கருத்தரங்கின் இரண் டாம் நாள் நிகழ்வாக நடைபெ றவுள்ள "சமூக மேம்பாட்டிற் கான நூலகங்கள்" என்ற மையக் கருவினை அடிப்படையாகக் கொண்ட பல்துறைசார் அறி ஞர்களின் கருத்தாடல்கள் பேரா தனை பல்கலைக்கழக நூலகர் கலாநிதி. ஆர்.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற உள் ளது. இதில் நூலகவியலாளர் என்.செல்வராஜா, திருமதி. துஷாரி செனிவிரட்ன (சிரேஷ்ட உதவி நூலகர், மொரட்டுவ பல்கலைக்கழகம்), என்.ரவிக் குமார் (சிரேஷ்ட உதவி நூலகர், கிழக்கு பல்கலைக்கழகம்), கலா நிதி. வி.விஜயபாஸ்கர் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோர் தமது சிறப்புரை களை வழங்கவுள்ளனர்.

வடமாகாணத்தின் நூலகவி யல் துறைசார் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், பணியாளர்க ளின் பங்கேற்புடன் இடம்பெற வுள்ள இக்கருத்தரங்கு நூலகவி யல் துறை சார்ந்து புதிய உத் வேகத்தினை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இத்துறை சார்ந்த ஆர் வலர்கள், ஆய்வாளர்கள், அறி ஞர்களை இதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# பாரதியார் நினைவு நாளை சிறப்பிக்கும் நிகழ்வுகள் கோப்பாய் கலாசாலையில்







யாழ்ப்பாணம், செப். 12

கோப்பாய் ஆசிரியர் கலாசா லையின் நேற்று புதன்கிழமை ஒன்றுகூடலின்போது பாரதி யார் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஆசிரிய மாணவி க.விஜிதா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் மானிப்பாய் ஆசிரிய வாண்மை விருத்தி நிறு வக விரவுரையாளர் உதயலதா நவதீசன், பாரதியாரின் பல்பரி மாணம் என்ற பொருளில் சிறப் புரையாற்றினார்.

கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் அதிதி அறிமுகவுரை யினை ஆற்றினார்.

விசேடகல்விநெறி ஆசிரிய மாணவி சப்னா பாரதியாரின் கவிதைத்திறன் என்ற பொரு ளில் ஆசிரிய மாணவர் உரையை ஆற்றினார்.

கலாசாலை பிரதிஅதிபர் க.செந்தில்குமரன் நிறைவுரையாற் றினார்.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட திருமதி உதயலதா நவதீசன்...

# புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா பாடசாலையில் மின்விசிறிகள் திருட்டு

## மூவர் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, செப். 12

முல்லைத்தீவு - புதுக்குடியி ருப்பு கைவேலி பாடசாலையில் மின்விசிறி திருட்டுடன் தொடர் புடைய மூவர், புதுக்குடியி ருப்பு பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட் டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் கடந்த 16 ஆம் திகதி 4 மின் விசிறிகள் களவாடப்பட்டிருந் தது. அதனையடுத்து பாட சாலை சமூகத்தினரால் பொலி ஸில் செய்யப்பட்ட முறைப் பாட்டினை தொடர்ந்து, நேற் றையதினம் திருட்டு சம்பவத்து டன் தொடர்புடைய கைவேலி முதலாம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதான நபரை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபரிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணையில் சந்தே கநபர் மின்விசிறிகளை திருடி இருவருக்கு தலா 3000 ரூபா வுக்கு விற்பனை செய்தமை தெரி யவந்துள்ளது. அதனையடுத்து மின்விசிறிகளை வாங்கிய இரு வரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரி டம் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால்...

தினமும் வாக்களிக்கத் தவறுபவர்களுக்கு இனி சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் மாவட்ட செயலகங்கள் அல்லது தமது பணியிடங்களுடன் தொடர்புடைய பிரதேச செயலகத்துக்கோ சென்று தமது வாக்கை செலுத்த முடியும்.

எதிர்வரும், 21ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு 7 இலட்சத்து 12 ஆயிரத்து 321 அரச பணியாளர்கள் தகுதி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சங்கு...

சின்னத்துக்கு மட்டும் வாக்களிக்கு மாறு இலங்கைத் தீவில் உள்ள தமிழர் களை மற்றும் வாக்களிக்க தகுதியுள்ள புலம்பெயர் தமிழர்களை உரிமையோடு வேண்டுகின்றோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 7ஆம் திகதி சனிக்கிழமை, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையில் இது தொடர்பான கருத்தாடல் இடம்பெற்றிருந்ததோடு, ஏகமனதாக இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பேரியக்கத்துக்கான தொடக்க புள்ளியாக தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்குரிய தேர்தல் அறிக்கையானது, தமிழர் தேசத்தின் அடிப்படைக் கோட்பாட்டு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாகக் கருதுவதோடு, பொதுவாக்கெடுப்பை நோக்கிய செயல்முனைப்புக்கான தொடக்க புள்ளியாக எண்ணுகின்றோம் - என்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## யாழில்...

மக்களின் முழு நம்பிக்கையையும் வென்ற தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு நாம் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நாட்டு மக்கள் மிகுந்த துயரத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன் வந்தார். அதற்கு செலுத்தும் நன்றிக் கடனாக நாம் மீண்டும் மக்கள் ஆணையை அவருக்கு வழங்க வேண்டும். அம்பாறை தமிழ் மக்களின் ஆணை நிச்சயம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வழங்கப்படும்.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு அம்பாறையின் அபிவிருத்தியில் மக்கள் பங்காளர்களாக வேண்டும். வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக புரையோ டிப்போயுள்ள உள்ளக பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றார். விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதோடு, அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றார்.

குறிப்பாக காணி சீர்திருத்த சட்டம் கூட அவரால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. எமக்கு தனிப்பட்ட அரசியல் நோக்கம் கிடையாது. பல்வேறு பொது பிரச்னைகள் காணப்படுகின் றன. அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

எனவே யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்லப் போகின் றோமா அல்லது அனைவரும் இணைந்து கிழக்கு மாகாணத்துக்கான அதிகாரத்தையும் அடுத்த பாராளுமன் றத் தேர்தலில் அம்பாறைக்கு தமிழ் அமைச்சர் ஒருவரையும் பெற்றுக் கொள்ளப் போகின் றோமா? எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்று தீர்மானிக்க முடியாமல் வடக்கில் பிளவடைந்து காணப்படுபவர்களின் தீர்மானங்கள் பயனற்றவை - என்றார். (ஐ)

## 3 பிரதான...

அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, சமஷ்டி அடிப்படையிலான தீர்வை கொடுக்க வேண்டும் என்ற எந்த ஒரு வாசகமும் அவர்களின் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், எனது தமிழ் தலைமைகள் கூறிய விடயம் என்னவெனில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்தால் நாங்கள் அனைவரும் அவர்களை பரிசீலிக்க தயார் என்று. மாறாக, அவர்களின் எந்த ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சமஷ்டி தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

2015 நல்லாட்சி அரசாங்கத்தில் ஏக்கிய ராஜ்ஜிய என்பதற்குள் நாங்கள் சமஷ்டியையும் தேடினோம். அதுகூட இவர்களின் விஞ்ஞாபனங்களில் இல்லை. எனவே, அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தாத வேட்பாளர்களாகவே இந்த பிரதான மூன்று வேட்பாளர்களும் செயல்படுகின்றனர்" - என்றார். (ஐ)

## 1கோடி...

முன்னர் வாக்காளர் அட்டை விநியோகத்தை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

எனவே, சனிக்கிழமைக்கு முன்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லை என்றால் தமது தேசிய அடையாள அட்டையுடன் உள்ளூர் தபால் நிலையத்துக்கு சென்று தமது அடையாளத்தைச் சரிபார்த்து வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மருத்துவர்...

நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாவகச்சேரி மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரிக்கு எதிராக முன்வைத்த பாலியல் குற்றச்சாட்டு அவதூறுகள் தொடர்பான வழக்கு முதலில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது, அர்ச்சுனா தரப்பு சில ஆவணங்களை சமர்ப்பித்து தமது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்கள் என்று கூறியது.

ஆனால், அவற்றை நீதிவான் நிராகரித்துவிட்டார். அர்ச்சுனா பரப்பிய தகவல்களுக்கான ஆதாரங்களாக அவற்றை ஏற்க முடியாது என நீதிவான் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், மருத்துவர் அர்ச்சுனாவால் தினமும் பிரச்னைகள் உருவாகின்றன. அவரால் பொலிஸாருக்கு தேவையற்ற நெருக்கடிகள் ஏற்படுகின்றன என்றும் சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதன்போது, ஆதாரமில்லாமல் இப்படி பேசிக்கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது என்று கண்டித்த நீதிவான், அர்ச்சுனா 4 தவணைகளிலும் ஆதாரங்களை முன்வைக்கவில்லை. அவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை அடுத்த 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கில் அர்ச்சுனாவுக்கு பிணை கையெழுத் திட்ட 3 பேரும் வழக்கு நடந்து கொண் டிருந்த போது கையை உயர்த்தினர். அவர்களின் கருத்தை நீதிவான் கேட்ட போது, அர்ச்சுனாவுக்கு அளித்த பிணை ஒப்பத்திலிருந்து தாம் விலக விரும்புகின்றனர் என்று கூறினார்.

"இதனை அர்ச்சுனாவிடம் தெரிவித்தீர்களா?", என்று அவர்களிடம் நீதிவான் வினவினார்.

அதற்கு "இல்லை", என்று பதிலளித்த அவர்கள், "இந்த விவரத்தை அர்ச்சுனாவிடம் முன்னரே கூறினால் அவர் நீதிமன்றத்துக்கு வருவதை தவிர்த்து விடுவார்", என்ற அச்சத்தில் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தனர்.

வழக்கை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், அன்றைய தினம் பிணையாளிகள் மூவரையும் மன்றில் முன்னிலையாக உத்தரவிட்டார். அத்துடன், வேறு மூன்று பிணையாளிகளை அழைத்து வருமாறும் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## சகல மலையக...

மக் களை சகோதர, சகோதரிகளாகவே நேசிக்கின்றார். மலையக மக்கள் அவர் சார்பாக ஜனாதி பதித் தேர்தலில் வாக்களிப்பதை அவர் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார். தமிழர்கள் என்ற ரீதியில் மலையகத் தமிழர் ஒவ்வொருவரும் தமது மூன்று விருப்பு வாக்குகளில் ஒரு வாக்கை அவருக்கு அளிப்பதை அவர் கட்டாய மாக மனம் உவந்து ஏற்றுக் கொள்வார்.

ஆனால், வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்னைகள் வேறு - மலையக சகோதர, சகோதரிகளின் பிரச்னைகள் வேறு. எனினும், நாம் யாவரும் தமிழ் பேசும் மக்களாக ஒன்று சேரலாம். அதில் தவறில்லை. அது மட்டுமல்ல. 1977ஆம் ஆண்டு காலத்தில் மலையகத்தில் முடுக்கி விடப்பட்ட கலவரங்கள் காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்த பல மலையகத் தமிழர்கள் வன்னி மாவட்டத்தில் குடியேறியுள்ளார்கள்.

இப்போது அவர்கள் எங்கள் மக்கள். வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பாரம்பரிய உரிமைகள் அவர்களையும் சாரும். ஆகவே, தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும் எமது தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க முன்வர வேண்டும். அவர்கள் சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பதை நாம் மனமகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

வட, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடையே இன்று ஒரு மறுமலர்ச்சி பரிணமித்திருக்கின்றது. உலக அரங்குகளில் எமது குரல் ஓங்கி ஒலிக்க - நாம் ஒரு பலமான மக்கள் கூட்டம் என்ற உண்மையை நிலைநிறுத்துவது அவசியம். இவ்வாறான ஒரு தமிழ் மொழி சார்ந்த ஈடுபாடு மலையகத்திலும் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியிலும் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே. நாம் யாவரும் தமிழ்த் தாயின் மக்களே என்ற உணர்வை இந்த ஈடுபாடும் நிலைப்பாடும் ஏற்படுத்துகின்றன.

அண்மையில் 30க்கும் மேற்பட்ட மலையக புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் போன்றோர் அரிய நேத்திரனுடன் இணையவழியில் தொடர்பு கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். தாம் யாவரும் ஒன்றுபட்ட தமிழினமாக தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகவும் மற்றும் மலையகத்தில் அவரை ஆதரித்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடப்போவதாகவும் அறிவித்தனர். அத்துடன் பொது வேட்பாளரை மலையகத்துக்கு மக்கள் சந்திப்புக்காக அழைத்துள்ளனர்.

பொது வேட்பாளரும் அவர்கள் கூட்டத்தில் பங்குபற்ற ஒத்துக் கொண்டுள்ளார். நான் தொடக்கத்தில் இவ்வாறாகக் கோராததற்குக் காரணம் கிழக்கிலங்கை முஸ்லிம் தலைவர்கள் பலர் வட, கிழக்கு இணைப்பை ஏற்க மறுக்கின்றார்கள். மற்றும் மலையகத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் நாம் எமது பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் எமது அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்துவதை அவ்வளவாக வரவேற்கவில்லை. பெரும்பான்மை வேட்பாளர்களுடன் சேர்ந்தே பயணிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

ஆனால், இப்போது எமது மலையக சகோதர, சகோதரிகளும், கிழக்கிலங்கை முஸ்லிம் சகோதர, சகோதரிகளும் நாம் யாவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒன்று சேர விரும்புவது மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. பொது வேட்பாளர் கட்டாயமாக வட, கிழக்கு பிரமுகர்களை மலையக பிரசாரப் பணிகளுக்காக அனுப்பி வைப்பார் என்று நம்புகின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மக்களிடையே...

இடை நிடுவில் நின்றால் பெரும் பிரச்னைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதை மக்கள் தற்போது உணர்ந்து வரு கின்றனர் - என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கோரி கடந்த 7ஆம் திகதி முதல் வீடுவீடாக செல்ல ஆரம்பித்தோம். இந்த வேலைத்திட்டத்தில் ரணில் விக்கிரம சிங்கவும் நிகழ்நிலை ஊடாக தொடர்பு கொண்டு வருகிறார். இதன் போதுதான் ஜனாதிபதிக்கு எந்தளவு மக்களின் ஆதரவு இருக்கிறது என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என எந்த முடிவும் எடுக்காமல் மௌனமாக இருந்தவர்களே தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன் வருகிறார்கள்.

எமது இந்த வேலைத்திட்டத்தை பார்த்துக்கொண்டு மக்கள் விடுதலை முன்னணியும் வீடுவீடாக சென்று தங்களின் வெற்றி உறுதியாகியுள்ளது. அதனால் தனிப்பட்டு விடாமல் தங்களுடன் இணைந்துகொள்ளுமாறு தெரிவித்து வருகிறது. யாழ்ப்பாணத்துக்கு சென்ற அநுரகுமார திஸாநாயக்கவும் இவ்வாறே தமிழ் மக்களை எச்சரிக்கும் வகையில் தெரிவித்திருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் வந்தாலும் அவர்களின் உண்மையான கொள்கையே தற்போது வெளிப்பட்டு வருகிறது. இதேநேரம் இவர்கள் வீடுகளுக்கு சென்று அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை பதிவு செய்துகொண்டு, அதன் பின்னர் அந்த எண்ணிக்கையை கணிப்பீடாக அறிவிக்கின்றனர்.

இதேநேரம் மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசாரங்களுக்கு அதிகமான மக்கள் ஒன்றுகூடுவது வழமை. ஆரம்ப காலத்தில் இருந்து அது இடம் பெறுகிறது. ஏனெனில், அந்த கட்சி ஆதரவாளர்களிடம் இருக்கும் ஒரு பண்புதான் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டம் எங்கு இடம்பெற்றாலும் அந்த கூட்டத்துக்கு அவர்கள் செல்வார்கள். இந்தப் பண்பு வேறு எந்த கட்சியிலும் காணமுடியாது. அதனால் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டங்களில் மக்கள் அதிகமாக கூடுவது தொடர்பில் எவரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை - என்றும் கூறினார். (ஐ)

## ஹெகலிய...

7 மாத காலமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நேற்று கெஹலியவுக் நீதிமன்றம் பிணை அளித்தது. (ஐ)

## சஜித்துக்கு...

பிரேமதாஸவை ஆதரிக்குமாறு சில வெளிநாட்டு தூதரகங்கள்கூட மறைமுகமாக வற்புறுத்தி வருகின்றன.

தற்போதைய நிலையில் புதிய ஜனாதிபதியாக யார் வரப் போகின்றார் என்பதைவிட தமிழ் மக்கள் அனைவரும் மீண்டும் ஒன்றிணைந்து ஒரு தேசமாக திரண்டு விடுவார்களோ என்பதே எல்லோரினதும் அச்சமாக உள்ளது என்றும் கூறினார். (ஐ)

## தேர்தல்...

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் சிறுவர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியாது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

இந்த நிலையிலேயே, தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளதாகவும் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, தேர்தல் நடவடிக்கைகளில் சிறுவர்களை இணைத்துக்கொள்ளாதீர்கள் என்று தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தியுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பண்டங்கள் இறக்குமதி வரியை திருத்த அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 12

பண்டங்கள் இறக்குமதியின் போது அறவிடப்படும் இறக்குமதி வரியைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பண்டங்கள் இறக்குமதி செய்யும் போது அறவிடப்படும் வரி வகைகளாவன, சுங்க இறக்குமதி வரி, செஸ் வரி, விசேட பண்டங்களுக்கான வரி மற்றும் துறை முகங்கள் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி தொடர்பிலான கொள்கை ரீதியாக அமுல்படுத்தவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

விசேட பண்டங்கள் வரிக்கிணங்க ஒரு சில இறக்குமதிப் பண்டங்களைக் குறித்த வரியிலிருந்து விடுவித்து சுங்க இறக்குமதி வரி உள்ளிட்ட பொதுவான இறக்குமதி வரிக் கட்டமைப்பை உட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களியுங்கள்!

### தமிழ்நாடு ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு அறைகூவல்

சென்னை, செப். 12

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு வாக்களிக்குமாறு, தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவருமான கொளத்தூர் தா.செ.மணி விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 10ஆவது சர்வதேச உலர் காலநிலை மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தில்!







யாழ்ப்பாணம், செப். 12

10 ஆவது சர்வதேச உலர் காலநிலை தொடர்பான மாநாடு யாழ்.பல்கலைக் கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் விவசாய பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்-சிறிசற்குணராஜா கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக இந்திய தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஈ.சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள், விவசாயத் துறை சார்ந்தோர், போராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனை

### பேராயரிடம் சஜித் உறுதிமொழி

கொழும்பு, செப். 12

**“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுப்போம்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் உறுதியளித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றுக் காலை கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்கு தாம் தோள் கொடுப்பதாகவும், நீதிமன்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்காக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயர்த்து ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# பிரிட்டன் ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடி; எதிர்ப்பை வெளியிட்டது இலங்கை அரசு!

கொழும்பு, செப். 12

இங்கிலாந்தின் ஓவல் மைதானத்துக்கு வெளியே தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறித்து இலங்கை அரசாங்கம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஓவல் மைதானத்தில் இடம்பெற்றவேளை 9 ஆம் திகதி புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களிற்காக இலங்கையின் கிரிக்கெட் அணியை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடி போன்றவற்றுடன் காணப்பட்டனர்.

இந்த விடயத்தை பிரிட்டனின் உள்துறை அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக பிரிட்டனுக்கான இலங்கை தூதுவர் ரோகித போகொல்லாஹம தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட டொலரின் தொகை உயர்வு

கொழும்பு, செப். 12

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பணம் 11 வீதத்தால் அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் 577.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளி நாட்டு தொழிலாளர்களிடமிருந்து வங்கி முறை மூலம் பெறப்பட்டதாக தெரிவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் மொத்தமாக 12.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் பணமாக பெறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருடத்தில் 4,288 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணம் அனுப்பப்பட்டுள்ளது. (அ)

# இஸ்ரேலில் விவசாயத்துறை வேலைவாய்ப்புக்கு செல்லும் 69 பேருக்கு பயணச்சீட்டுக்கள் வழங்கல்

கொழும்பு, செப். 12

இஸ்ரேலில் விவசாயத் துறையில் பணிக்குச் செல்லும் 69 பேருக்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நேற்று முன்தினம் விமானப் பயணச்சீட்டுக்களை வழங்கியது.

இஸ்ரேல், இலங்கை அரசுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இதுவரை 2,252 இளைஞர்கள் இஸ்ரேலில் விவசாய கைத்தொழில் துறையில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் இவ் ஒப்பந்தத்தின் கீழ் 5 வருடங்களும் 5 மாத காலத்துக்கு அங்கு பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்கள். இலங்கை அரசு சார்பாக இஸ்ரேலிய வேலைவாய்ப்புகளுக்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் பணியாட்களை அனுப்புகின்றது. அவர்கள் இஸ்ரேலிய பீபா நிறுவனத்தின் லொட்டரி முறையில் தேர்வு செய்யப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 18ஆம் திகதி நாடளாவிய ரீதியாக மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, செப். 12

எதிர்வரும் 18ஆம் திகதி நாடளாவிய ரீதியாக பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையில் சேவையாற்றும் தமது சங்கத்தின் பிரதி செயலாளர் பாலித ராஜபக்ஷவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையை நிறுத்தக் கோரி, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இந்த பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

நேற்று முன் தினம் கூடிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கக் கூட்டத்தின்போது இந்தத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகதபால தெரிவித்தார்.

அதேநேரம், நேற்று முதல் நாடளாவிய ரீதியாகவுள்ள சகல வைத்தியசாலைகளிலும் கறுப்புக் கொடி பறக்கவிடத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.